**பத்திரிக்கைச் செய்தி**

**தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் – திருநெல்வேலி பிரிவு.**

**அரசு நீச்சல் குளத்தில் 12 மணி நேரத்தில் நீந்தும் திட்டம்**

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் திருநெல்வேலி பிரிவு சார்பில் பாளையங்கோட்டை அண்ணா விளையாட்டு அரங்கில் அமைந்துள்ள நீச்சல் குளத்தில் கோடை கால விடுமுறையை முன்னிட்டு கோடைகால சிறப்பு நீச்சல் பயிற்சி முகாம் 01.04.2017 முதல் தினமும் 1 மணி நேரம் நடைபெறவுள்ளது.

NIS தகுதிபெற்ற பயிற்சியாளரை கொண்டு சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை 12 நாட்களில் மொத்தம் 12 மணி நேரத்தில் நன்றாக நீந்துவதற்கு பயிற்சி வழங்கப்படும். இப்பயிற்சி முகாமில் சேரவிரும்புபவர்கள் ரூ.1000/– கட்டணத்தொகையை செலுத்தி இப்பயிற்சி முகாமில் சேர்ந்து பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். காலை 6.30 மணிக்கு தொடங்கி நாள் முழுவதும் இப்பயிற்சி நடைபெறும். பெண்களுக்கு பெண் பயிற்சியாளரால் காலை 11.00 மணி முதல் 12.00 மணி வரை சிறப்பு பயிற்சி அளிக்கப்படும். நிறைவு நாள் அன்று பயிற்சி முகாமில் கலந்து கொண்ட அனைவருக்கும் அரசு சான்றிதழ்கள் வழங்கப்படும்.

மேலும் விவரங்களுக்கு 9787405951 என்ற எண்ணில் நீச்சல் பயிற்றுநர் திரு. கர்ணன் என்பாரை தொடர்புக் கொள்ளவும்.

நீர்நிலை விபத்துகளில் இருந்து தங்களையும், தங்கள் குழந்தைகளையும் பாதுகாத்து கொள்ளவும் உடலை ஆரோக்கியமாக வைத்து கொள்ளவும் இன்றே இப்பயிற்சியில் சேர்ந்து பயன்பெறுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

மேற்கண்ட தகவலை திருநெல்வேலி மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் **முனைவர்.க.சேவியர் ஜோதி சற்குணம்** அவர்கள் தெரிவித்தார்கள்.

ஒம்/–
மாவட்ட விளையாட்டு மற்றும்
இளைஞர் நலன் அலுவலர்
திருநெல்வேலி.